ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ பாண்டவாள் சரித்திர

பாரதத் திருப்புகழ்.

காவடிச்சிந்து

V. V. கோ. துரைசாமி நாயுடவர்களால்

மதுரை வடக்காவணிமூலவீதி, புத்தகவியாபாரம்

இ. ராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1922

விலை] *Registered Copy-Right.* [அணா 3

உ

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள மஹாவித்வான்

ஸ்ரீமான் சங்கரதாஸ் சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான

சந்தச் சரப. ஷண்முகதாஸவர்களியற்றிய

பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லாம் தமாஷான பாடல்கள் இதுவே நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். முத்தியை வேண்டிப் பக்தி புரிவோர்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி ஜோலாகலமாய் வேலவனோடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலாகாலத்துக்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டே, சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே நிறைந்த விசித்திரப்பாடல்கள். பாடலிற்சிறந்த நாடகத்தார்க்கும் பயன்தரும் பாட்டுகள். இன்பம் பயக்கும் இந்துஸ்தான், கவாய், இல்லாவணி, டப்பா, மெட்டுகளில் சிறந்த பாடல்கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும் சந்தப்பாடல்கள் நிறைந்த இப்பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் ஒருங்குதிரட்டிப் புதியாயச்சிட்டு வெளிவந்திருக்கின்றன. படிக்கப்படிக்கத் திகட்டாது திரும்பத்திரும்பப் படிப்பதன்றிக் கீழே வைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக் காப்பிகளே தயாரிலிருக்கின்றன. விலை அணா 5.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! 12-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்.

முந்துங்கள் புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இராமாயணம், திரௌபதைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்திரம், அல்லியரசாணி சரித்திரம், மயில்ராவணன் சரித்திரம், மதுரைவீரன் சரித்திரம் துரோபதைவஸ்திராபஹரணம், கீசகசம்ஹாரம், புதிய வர்ணமெட்டு பார்ஸி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்திரம் முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரீக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. விலை ரூ. 1-4-0

தியாகராஜ சோதிட ஆனந்தக் களிப்பு.

சோதிடங் கற்றுப்பலன் சொல்லப் புகுவோர்க்கு கிரம்ப அவசியமான புத்தகம். இப்புத்தகத்தை ஒருமுறை படிப்போர் சகலவிதமான ஜாதகங்களுக்கும், 12-பாவகங்களுக்கும் குறைவின்றிப் ப[illegible]றலாம். விலை அணா 6.

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்.

வ
1.22
3 MAR 1922

ஸ்ரீ பாண்டவர் சரித்திர பாரத திருப்புகழ்.

காவடிச்சிந்து வர்ணமெட்டுகள் அடங்கியது.

உடையார்பாளையம் புத்தக வியாபாரம்,
S. மருதமுத்துப்பிள்ளை, பா. குருநாதபிள்ளை
இவர்கள் விருப்பத்தின்படி,
உடையார்பாளையம்
வே. வீ. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் குமாரர்
துரைசாமி நாயுடவர்களால்
இயற்றப்பட்டு,
மதுரை, வடக்காவணிமூலவீதி, புஸ்தகவியாபாரம்,
இ. ராமசாமிக்கோனரால்
மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸில்,
பதிப்பித்தது.
1922.

விலை] *Registered Copy Right.* [அணா 3.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான புத்தகவியாபாரிகளுக்கும், அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

உடையார்பாளையம் வெ. வீ. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் குமாரர் துரைசாமிநாயுடு அவர்களியற்றிய ஸ்ரீபாண்டவாள் சரித்திர பாரதத்திருப்புகழ்காவடிச்சிந்து என்ற இப்புத்தகத்தை இ. ராமசாமிக் கோனாராகிய என்னால் சகல பாத்தியதையுடன் பெற்று, அச்சிட்டு காபிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இப்புத்தகத்தையாவது, இதிலுள்ள பாடல்களில் எதையாவது யாரேனும் எனது உத்திரவின்றி அச்சிடுவரேல் என்னால் கோரும் நஷ்டிக்கும், கவர்ன்மெண்ட் காபிரைட் சட்டத் தண்டனைகளுக்கும் உட்படுவார்கள் என்பதை இதன்மூலமாகத் தெரிவித்திருக்கிறேன்.

இங்ஙனம்,

இ. ராமசாமிக்கோன்.

பப்ளிஷர், புக்ஸெல்லர், வடக்காவணிமூல வீதி,

மதுரை.

சேந்தமிழ்ச் சரபம் விரகாலூர்

மகா-ா-ா-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களாலியற்றிய,

கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ்	0	4	0
இராமாயணத்திருப்புகழ், இலங்காதகனக்காவடிச்சிந்து	0	3	0
சிதம்பரம் நடராஜர் நடனத்திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
ஞானசௌந்தரித் திருப்புகழ் காவடிச்சிந்து 2-பாகம்	0	8	0
அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
பாண்டவாள் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ்	0	4	0
பரமன் திருமால் முருகன் பக்திரசக் கீர்த்தனை	0	4	0

சு. துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய,

பாகவதத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
சப்தகாண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
ஸ்ரீபாகவத குசேல பக்தியானந்தர் சரித்திரத்திருப்புகழ்	0	4	0
பார்வதி சத்தியவான் சாவித்திரி சரித்திரம்	0	4	0
வள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ பாண்டவாள் சரித்திர பாரதத் திருப்புகழ்

காவடிச்சிந்து.

வெண்பா.

சீர்புகழும் பாரதத்தைச் செந்தமிழிற் சிந்தாகப்
பேர்புகழப் பீடுபெறப் பேசுதற்கு—நேரார்
பரமன் முதற்புதல்வன் பாங்குபெறு மைந்த
காமுங் கழற்பதமுங் காப்பு.

விருத்தம்.

சீர்பெற்ற மறைநான்கோ டைந்துமறை யெனஉலகோர்
செப்பும் வண்ணம்
பேர்பெற்ற வியாசர்வட மொழியதனல் பாரதமாய்ப்
பேசும் இக்கதை
வார்பெற்ற வடவரையின் வெற்பதன்மேல் மருப்பதனல்
வரைந்த வள்ளல்
கார்பெற்ற கரிமுகத்துக் கணபதியை யென்னளும்
கருத்தில் வைப்பாம்.

சரஸ்வதி துதி.

மன்றுளாடியவா என்ற வர்ணமெட்டு.

நாவினில் வருவாய் எந்தன் நாவினில் வருவாய்
பிரமன்தேவி உந்தனிரு திருமலரடி களைப்பணிந்தேன் (நா)

பூவிமைர்ந்துறை வாழும்ஒய்யாரி
பூசைகள் செய்தேன் நல் வாக்குப்பெறக் கோரி
கூவித் துதித்திட்டேன் நான் முகன் பாரி
கொடுத்திடுவாய் எனக்கு வரம்
அடுத்து உன்னைப் பணிந்தேனே (நா)

காமதில் வீணை பிடித்திடும் அம்மணி
கனத்த வேதங்க ளோதிடும் பொன்மணி

வரமது தந்திடுவாய் வேதன் பெண்மணி
மாதவன்நல் மருமகளே பாதம்போற்றிப்பணிந்தேனே (நா)

வெண்டாமரையில் விளங்கிடும் வாணி
வித்தைகள் தந்திடும் புத்தக பாணி
செந்தாமரைப்பதம் துதித்திடும் துரைசாமி
தெளிவாகவே கவிபாடிடத்திருவருளளிப்பாயம்மா (நா)

அள்ளிஅள்ளி நீர்குடிக்கும் என்ற வர்ணமெட்டு.

பாண்டவர் மனமகிழும் ஆண்டவன் சகோதரி
பாலனைக் காத்தாதரி
பாஞ்சாலியே பாலனைக் காத்தாதரி
பணிந்தேன் யானு முந்தன் பாதம்
கருணை வைத் தென்னைக் காப்பதுன் வீதம் (பா)

தீயிற் பிறந்திடு செல்வப்பாஞ்சாலியே
தீவினை யகற்றும் பாலியே
ஐவர் பாரியே தீவினை யகற்றும்பாலியே
சிறுவன் துயரைத் தீர்த்திடுவாய்
கருணைவைத் தென்னைக் காத்திடுவாய் (பா)

அண்டர்களுக் கமுது தந்தவன் சகோதரி
அடியேனைக்காத் தாதரி
மனோன்மணி அடியேனைக்காத்தாதரி
அண்டியே பாதம் தொண்டு செய்தேனே
எண்டிசை புகழும் தேவிநீ தானே (பா)

பாவலர்கள் பாதங்களை ஆவலோடு தேடியே
பணிந்திடும் துரை சாமியே
சதாகாலமும் பணிந்திடும் துரைசாமியே
பாடிய சிந்துவிற் கூடிய பிழையை
நாடிப் பொறுத்திடப் பாதம் நமஸ்காரம் (பா)

சர்ஜனர்கள் கொண்டாடும் என்ற மெட்டு.

தேவர்கள் கொண்டாடும் தசரதன் பாலனே
பாலனே தசரதன் பாலனே (தே)

ஆவலோடு யானையாதி தேவாவாரு மென்றேயோதி
அழைத்திடச் சென்றஃதைப் பிழைத்திடச் செய்தவனே
பாவை யகலிகைக்கொரு சாபந்தொலைத்த திரு
பாதனே நாதனே வேதன்தனை ஈன்றவனே (தே)

ஜெனகன் சபையிற்சென்று மனதுமகிழ்வாய் நின்று
சீதாளனும் ஜெகமாதாவை மணந்தவனே (தே)
அன்பாய்ச் சௌரியன்று தந்தகனியைத் தின்று
அற்புதமுத்தியெனும் பொற்பாதம் தந்தவனே (தே)
தாசன் துரைசாமி நிதம் ஆசையோடுவேண்டும் பதம்
தருவாய் ஸ்ரீபரந்தாமா வருவாய் எனையாளவே (தே)

பரமசிவன் துதி.

ராமனைநினைமனமே என்ற மெட்டு.

பல்லவி.

பரமனைப் பணி மனமே யனுதினமும்
பந்த பாசத்தினில் சிந்தை வையாமலே (பர)

அநுபல்லவி.

சிரமது வணங்கி மார்க்கண்டன் வேண்டச்
சித்தம் வைத்தவனைக் காத்துமே ஆண்ட
தேவாதி தேவன்
திருநட ராஜன்
தீவினை தீர்க்குமீசன் (பர)

சரணங்கள்.

காலனைக் காலாலுதைத்திட்ட ஐயன்
கரமதில் மான்மழு தரித்திட்ட துய்யன்
மேலானதேவர்கள் கொண்டாடும் மெய்யன்
மேருவைத் தனுவாய்ப் பிடித்திட்ட கையன்
வினையை நீக்குவான்
ஜெனனம் போக்குவான்
மேலானமுத்தியுண்டாக்குவான் (பர)

4. திரிபுரமதனை நொடிதனி லெரித்தவன்
திங்களும் கங்கையும் சிரமதில் தரித்தவன்
ஹரி அய னரனென மூவுரு வானவன்
அன்பர் சுந்தரமூர்த்திக்காய்த் தூதுபோனவன்
அடியிணை நாடி
அனுதினந் தேடி
அரிய துதிகள்பாடிப் (பர)

5. துரைசாமிநாதன்று தித்திடும் ஈசன்
சுந்தரி உமையாள் மகிழ்ந்திடும் நேசன்

மறைமுடி மீதில் விளங்கும் பிரகாசன்
மகிதல பக்த்தர்கள் மேல் விசு வாசன்
மலரடிதேடி
மனதினில்நாடி
மகிழ்ச்சியாய்க்கொண்டாடி (பர)

விஷ்ணு துதி.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

1. அறியாத பாலன் துருவன் சிற்றன்னை வாக்கால் மெத்தவே
அஷ்டாக்ஷரத்தைப்பற்றிச் சிறுவன் அனு [நொந்து
தினம் உனை மன உறுதியாகவே
கன தவம் புரிந்திடவும்
அந்தச் சிறுபாலகனையே
மிகத்துலங்க ஜெகம் புகழ
அளித்திட்டாய் நல் முத்திதனையே

2. கரியாதி மூலமே யென்று அழைத்தபோது பிழைத்திடவே
காத்ததை ரக்ஷித்திட்டாய் அன்று ஜெக
காரணா பரிபூரணா திரு
நாரணா உனைக் கோரினேன்
காக்க இங்கு வந்திடுவாயே
ஜானகி நேசா வானவர்தொழும்
கமலபாதம் தந்திடுவாயே

3. பக்தன் பிரகலாதன் சித்தமே உறுதியாக ஹரிஓம்என்று
பற்றித் துதி செய்த சத்தமே கண்ட
பாவி இரண்யனும் கூவிச் சினமுடன்
மேவிப்பாலக னைவிபோக்கிடப்
பலவித இம்சைகள் செய்திடவே
சிறுவனுக்கு ஒரு துன்பமும்
பாதிக்காமல் செய்திட்ட தேவே

4. கர்த்தனேகாத்திடுவாயென்று துரௌபதையும் துதித்தபோது
கன்னனே துயில் தந்திட்டாயன்று எனைக்
காராய் நின்பதம் தாராய் என்பவம் தீராய்
கடைக்கண்ணால் பாராய் பாராய்
காருண்ய ஜானகி நேசனே
கமலபாதம் தந்து இப்போ
காத்திடும் துரைசாமி தாசனை

ஆதிபர்வம்.

பாண்டவர்கள், துரியோதனாதிகள் உற்பத்தி விபரம்.

சேந்தின்மாநகரந்தனில் மேவிய என்ற மெட்டு.

1. அந்தமான அஸ்தி னபுரியாண்ட
அதிநற்குணமான மைந்தர் புகழ்
மதிகுல சந்தனு வேந்தர் இவர்
அகமகிழ்வொடு கங்கையென்னும்
மிகஉருபவதி மங்கைதன்னை
அன்புடன்மணஞ் செய்துராஜனும்
அருமையாய்ப் பெற்றிட்ட பாலன்
பீஷ்மரென்னு நற்குண சீலன்

2. இந்த மாமன்னன் சந்தனு ராஜனும்
இங்கித பரிமள கந்தி யென்னும்
சிங்கார மங்கையைப் பிந்தி மிக
இன்பமோடு மணஞ் செய்து வேந்தன்
அன்புடனே பெற்ற மைந்தர்
இத்தரணி புகழ்கின்ற சித்தி
ராங்கதன் என்னும் வேந்தன்
பாங்கான விச்சித்திர வீரியன்

3. அந்தமாமன்னன் விச்சித்திரவீரியன்
அம்பிகை அம்பாலிகை மாதை
இன்பமாய்ச் செய்தானிக் கோதை அப்பால்
அந்த மன்னவன் மாண்டு போகவே
சந்த்ர வம்சம் விருத்தி நிற்கவே
ஆனதால் குருவாம் வியாசரும்
அந்த மங்கைகளைச் சேர்ந்து புத்திரர்
தந்திட்டா ரருள் கூர்ந்து

4. இந்தமா மங்கை மார்களி லம்பிகை
ஈன்றனன் என்பா யோர் பாலன் திருத
ராட்டிர ரென்னும் சீலன் மிக
இன்பமோடு அம்பாலிகையுமே
ஈன்ற பாலனும் பாண்டு வாகும்
இங்கிதமங்கைமார்களின் தோழி
இன்பமாய்ப் பெற்றிட்ட பாலன் விதுர
ரென்னு நற்குண சீலன்

5. அந்தகன் திருத ராட்டிரன்மைந்தர்கள்
அரவக்கொடியெனும் வேந்தன் துரியோ
திரனென்னும் மகாராஜன் இவன்
அன்பு தம்பிகள் துரியனாதிகள்
பிரியமுள்ள கொடிய மன்னர்கள்
ஆகவே நூறு பேருடனே
ஆண்டுவந்தான் புவிமீதே கொடுமை
பூண்டு வந்தான் ஐவர் மீதே

6. ராஜனும் பாண்டுவின் மைந்தர்கள்
நலமுள்ள தரும ராஜன் மிக
பலமுள்ளவீம ராஜன் அதி
நன்மை மிகுகுணை அர்ச்சனனோடு
நகுலசகாதேவ மன்னனும்
நாடெங்கும் புகழ்கின்ற பாண்டவர்
நல்லவீடுபெற்ற மாந்தர்கள் ஜெக
மெல்லாம் புகழும் வேந்தர்கள்

கவி.

பாண்டுவின் புத்ரரோடு பருதியின் மைந்தன் கர்ணன்
காண்டகாந்தாரி மைந்தர் கனத்தவ ரிவர்கள்கூடி
ஈண்டியல்பலஞ்சோதிக்க இணையிலா விளையாட்டாகத்
தூண்டியே பந்துமாடத் தொகுத்தவர் புரியலுற்றார்.

துரியோதனன் வீமன் பலத்தை யறிந்து, சகுனியுடன் முறையிடுகிறான்.

வண்ணத்தினைமாவைத்தேள்ளியே என்ற மெட்டு.

1. பார்க்கும் போதெல்லாம் இவ் வீமனே உயிரைப்
பற்றிக்கொண்டு போகும் எமனே எனப்
பயங்காணுது என் மனம் மாமனே இவன்
பலமான தோர் உருவாகவே
யிணையில்லாத வலுபூண்டதால்
பார்க்கவே யானும் பயந்தேனே அதைப்
போக்கவே உம்மை நயந்தேனே

2. யார்க்கும் வீமன்வலு காணனே ஓர்கால்
போர்க்கு வந்தாலுயிர் பூணனே இவனை
அடக்காவிட்டால் பிந்தி வீணனே
அதனாலேயே மனம்வாடுது
எதுவாகினும் கூறீர்களோ

அண்டியே உங்களை நம்பிட்டேன் இதற்
கான யோசனைக்குக் கும்பிட்டேன்

கண்ணிலான் மதலையோடு கர்ணனும் சகுனிகூடி
மண்ணினில் வாய்வின் புத்ரன் மரித்திட வேண்டுமென்று
எண்ணியே யனேகதுன்பம் இயற்றிடக் கண்ணனென்னும்
அண்ணலின் கிருபைதன்னா லாருயிர் பிழைத்திருந்தார்

துரோணர் பாஞ்சாலனிடத்தில் சபதங்கூறுகிறார்.

பாளைவாய் கமுகில்வந்தூர் என்ற மெட்டு.

1. அன்று பாஞ்சாலனே நீயு மஸ்திரவித்தைகற்றபோ
தவனி பாதி தாரோமென் றுரைத்தாயே சற்று
மறியாதவன் போலவே நகைத்தாயே

2. நன்று பாஞ்சாலனே நீயும் நாடு தராவிட்டாலும்
நான்கேட்பது உன்னையொரு காலியே அதற்கும்
நானுவிதம் பேசினயே கேலியே

3. தந்திரமாய்ப் பேசும்உந்தன் சிந்தைகலங்கிடஇப்போ
சாடிடும் வல்லவனென்று தேருமே அது
தகாது என்றல்லோவிட்டேன் பாருமே

4. உந்தனை யொத்த ஓர் ராஜ புத்திரனுக்கு எந்தனின்
உயர்தனு வித்தையைக் காட்டுவேன் அவனு
னுன்னைத் தேர்க்காலினில் கட்டி வாட்டுவேன்

அர்ச்சுனன் பாஞ்சாலராஜனைத் தேர்க்காலில் கட்டிக் கொண்டு வந்ததினால் பாஞ்சாலன் சபையில் நின்று பிரதிக்கினை செய்கிறான்.

உத்தேசம்பதினாறு வயதுள்ளமாது என்ற வர்ணமெட்டு.

1 இத்தனை வஞ்சகம் என்மீதிலெண்ணியே
இந்தச்சபை முன்னே பங்கம்பண்ணியே
சித்தமகிழ்ந்திட்ட துரோணரேயானே
சீவன்போக்கவழி தேடுவேனே

2 சத்தியந்தப்பி நடந்தவனென்று
சங்கைபடவே செய் திட்டாரேயின்று
சுத்தனை துரோணா சாரியை யானே
துலைத்திடவேவழி தேடுவேனே இவர்

3 முந்திச்சொன்ன சபதத்தின்படியே
இன்றெனைப் பங்கஞ் செய்தாரிப்படியே
அந்தத்துரோணர் உயிர்போக்கயானே
அருமைப் புத்திரனைப் பெற்றிடுவேனே எந்தன்

4 சிந்தை கலங்க இச்சபைமுன்னடி
கொண்டு வந்தவனை யானுற வாடி
எந்தன் மருகனைச் செய்திடத்தானே
அந்த முள்ள பெண்ணைப் பெற்றிடுவேனே

பாஞ்சாலன் உபயாசன், யாசன் என்னும் முனிவர் களிடம் பிள்ளைவரம் கேட்கின்றான்.

முத்திநெறி யறியாத என்ற மெட்டு.

1. அய்யனே மாமுனியே அருள் செய்வா யித்ததியே
மெய்யனே என்கவலை, விளம்புவேன் கேட்டிடுவீர்
துய்யனே எந்தன் மனந் துடிக்கவே துரோணரெனைச்
செய்யவே மானபங்கஞ் சிந்தையு மெலிந்தேனே (அ)

2. வஞ்சமே வைத்தவரும் விஜயனால் பங்கம் செய்ய
நெஞ்சமே பதைபதைத்து நேர்ந்தது மனத்துயரம்
தஞ்சமே யென்தன்தேவா தனுவில் வல்லதுரோணரைத்
துஞ்சும்படி சேயன்பெறத் துய்யனே நீ ரெனக்கருள்வீர் (அ)

3. அங்கசனைப் போன்ற நல்ல அழகுள்ள விஜயனுக்குத்
தங்கமேனி வண்ணமொடு சற்குண மமைந்தவொரு
மங்கை யானும் பெற்றுத் திருமணஞ் செய்து தரவெண்ணித்
தங்கனையும் தேடிவந்தேன் தவமுனியே வரமருள்வீர்

துஷ்டத்தாய்மன் திரௌபதை உற்பத்தி விபரம்.

நொண்டிச் சிந்து.

1. பாஞ்சாலராஜன் தானுமே பாதம்
பணிந்து உபயாசன் யாசனிடமே
வேண்டி வரமது கேட்க முனிவரும்
விரும்பியப்படி யாகஞ் செய்ய வொப்பினர்

2. வேத விதிப்படியாகக் குண்டம்
வெட்டி நல்லயாக வேதிகை போட்டு
சதிபதி இருவரையும் யாக
சாலை முன்னே உட்காரவைத்து

3 விதிப்படி ஓமம் வளர்த்து பூஜை
வேண்டியதுகள் தவறுமல் செய்து
வரும்போது ஓம குண்டத்தி லிருந்து
வந்ததுபொன் தட்டொடு பிண்டமுந் தானே

•4 அந்தச் சமயந் தனிலே பாஞ்சாலன்
அன்பு மனையாள் பூவாயிடவே
ராஜனும் வருத்தம் கொள்ள மாமுனி
நலமுள்ள இப்பிண்டம் வீணுகாதென்ருர்

5 இந்த விதஞ் சொல்லி முனிவர் பிண்டத்தை
மந்திரங்கள் செய்து போட்டிடவே
அந்த ஓம குண்டந்தனிலே இருந்து
அழகான ஓர்சிறுவன் தேருடன் வந்தான்

6 பின்னையொரு பிண்டமும் போட அதில்
பொன்னைப் பழிக்குமேனிக் கன்னிகையுமே
விந்தையுள்ள வில்லுடன்வர அப்போ
அந்தரத்திலே அசரீர் சொல்லு தரவே

7 சொன்ன மொழிப்படியே சிறுவனுக்குத்
துஷ்ட்ட தாய்மனெனப் பெயரு மிட்டார்
சொர்ன வடிவழகு அம்மைக்குத்
துரௌபதா தேவியென்று பேருமே யிட்டார்

தருமருக்கு இளவரசு பட்டஞ் சூட்டுதல்.

பொன்னுலவு சென்னிகுள என்ற மெட்டு.

1. அத்தினபுரி யத்தினையும் மெத்த அலங்கரித்தே
அனேக சர்ச்சனர்கள் வந்துகூடினர் ஐம்ப
தாறுதேச ராஜர்கள் முன்னடினர் கங்கை
யான நல் கோதாவரி காவேரி தீர்த்தங்களினுலே
அய்யனும் தருமர் ஸ்நான மாடினர் அவர்
மெய்ய தனிலே பணிகள் சூடினர்

2. சுத்திலும் வேதியர்மிகப் பக்தியோடு வேதங்களைச்
சொல்லியே மந்திராக்ஷதை போடவே பெரியோ
ருள்ளமே பூரித்து ஆசீர் பாடவே பல
துத்தியோடு நாகசுரம் பேரிகை டமாரங்களும்
சுற்றிலும் திடுதிடென்று சாடவே அப்போ
தெத்திசை யோரு மிதைக் கொண்டாடவே

3. மனது மகிழ்ச்சியோடு மாமுனி வியாசருமே
மங்களமா யாசிர்வாதம் பாடினார் நல்ல
தங்கமுடி தருமருமே சூடினார் அப்போ
வானவ ரிந்திரர் முதலானவர் தேவமலரை
வாரிவாரிக் கொட்டியே கொண்டாடினார் ரம்பை
மாது மேனகை நடன மாடினார்

4. சினமே யில்லாமல் நல்ல குணமேஉருவாய் வந்த
தீரனும் தருமர்முடி சூடவே சங்
கீதங்கள் திலோர்த்தமையும் பாடவே வந்த
தேவருங் கற்பகமலர் வாரியே மாரிபோல் கொட்டிச்
சிந்தையு மகிழ்வு கொண்டாடவே தேவ
அந்தியியோடு ரம்பைகளாடவே

தருமருக்குப் பட்டங்கட்டியதைப்பற்றி துரியோதனன் தன் தகப்பனிடங் கூறுகிறான்.

பாதிராத்திரி வேளையில் என்ற மெட்டு.

1. தந்தையே யானு மிங்கு வந்ததைச்
சாற்றுவேன் நீருங் கேளுமே முடி
தர்மருக் கிந்த அந் நாளுமே கண்டு
ததும்பி யென் கண்ணீர் வீழுமே அப்போ
சற்று யோசித்துப் பாராததாலே
தயங்கினேனே யென் நாளுமே

2. விந்தையே யுள்ள கார்யமல்லாமல்
வேறுவுண்டோ நீர் பாருமே முடி
வேண்டாதாரில்லை யாருமே யுலகில்
விளங்கிடஎந்தன் பேருமே என்
விரோதியான தருமரை வெளி
யோட்டவே வரந் தாருமே

திருதராட்டிரன் தன் குமாரனுக்குப் புத்தி சொல்லல்..

பூமிமெச்சிடு மண்ணுமலே என்ற மெட்டு.

1. பேச எந்தனிடம் ரோஷமாகயிங்கு வந்தாயோ
மனம் வெந்தாயோ துன்பம் தந்தாயோ வெகு
மோசக்கார னென்று
தேசத்தாரு மேச நினைந்தாயோ

2 தேசமன்னர்களும் நேசமுடன் சபை கூடினார்
புகழ்பாடினார் கொண்டாடினார் நன்மைத்
தேடும் தர்மருக்கே
நாடியேமுடி சூடினார்

3 எந்தன் தம்பியாலே இந்தத் தேசங்களை யாண்டேனே
புகழ் பூண்டேனே சுகங் கண்டேனே உனக்
கிந்த யோசனையும்
வந்ததினால் துய ருண்டேனே

4 உந்தனுக்கு இந்த யோசனை எவருபாயமோ
யார் சகாயமோ என்ன மாயமோ இந்த
உலகத்தில் தர்மரை
யோட்டுவது மென்ன ஞாயமோ

துரியோதனன் சொல் கவி.

அருமையா யெம்மைப்பெற்ற அண்ணலே யாங்களிப்போ
வறுமையை யடைந்துஇங்கு வாழ்வதில் பெருமையென்னை
சிறுமையை டடையக்கானம் செல்குவோம் மகிழ்ச்சியாகப்
பெருமையை யடையவைப்பீ ருமதுபின்னவர் புத்ரருக்கே

திருதராட்டிரன் தருமரிடம் வஞ்சனையாகப்பேசி,
வாரணாவதமனுப்புகிறான்.

மல்டிவயிற்று மகன் என்ற திருப்புகழ் மெட்டு.

1 அருமை யென் தரும ரெத்தினமே நா
னடையுங் கவலை சொல இத்தினமே வெகு
ஆவலா யுனை வந்து நத்தினமே என் புத்திரனே

2 பெருமையென் தம்பியால் பெற்றேனே அவன்
பிரிந்ததினால் துயருற்றேனே உந்த
னாலேயத்துயரற்றேனே புகழ் பெற்றோனே

3 வாரணாவத நக ரென்றதேசம் யார்
சென்றாலுமவர்குல தோஷம் ஏகு
மென்று பெரியோ ருபதேசம் மிகக்கேட்டேன்

4 ஆரணமாகமம் பாடிடும் ஊரே அந்த
வாரணாவதி செல்லு வீரே உன்
தந்தை நற்கதி பெற்றிடும்வாறே செய்குவீரே

அரக்குமாளிகை கட்டிய கனகனென்ற சிற்பி வீமனுக்கு அதன் சூதைத் தெரிவிக்கிறான்.

ஆறுமுக வடிவேலனே என்ற மெட்டு.

1 வீமராஜனே நான்கட்டிய மாளிகை
விபர மறி விப்பேன் வெகு
தீமைகொண்ட துரியோதனன் வஞ்சகம்
சொல்லித் தெரி விப்பேன்

2 க்ஷேமங்காணச் சகிக்காப் பாவி உங்களின்
தேகந் தொலைத் திடவே எண்ணி
ஆவலுடனென்னை அரக்குமாளிகை
அமைக்க விதித் திடவே

3 அரவக் கொடியோ னெனுந் துரியோதிரன்
ஆக்கினை கேட்க லானேன் இது
அரக்கு பஞ்சுமுத லாகியதால் கட்டி
ஐயா அமைக்க லானேன்

4 பரபிரம்ம சொரூபன் ஸ்ரீவாசுதேவனைப்
பணிந்திடுஞ் சீமானே விதுரர்
பாதக இச்சூதை ஒதிவரும்படி
பகர்ந்திட்டார் என் கோனே

5 நேசனே இந்த மாளிகையின் மத்தியில்
நேமித்தேன் சுரங்கம் விசு
வாசமதாகவே உந்தனுக்கு நான்
வகுத்திட்டேன் அந்தரங்கம்

6 மோசங்கள் செய்திட யோசித்த சங்கதி
முறையா யறி வித்தேன் தியால்
நாசமாகும்போது தப்பிக்குமார்க்கத்தை
நன்றாய்த் தெரிவித்தேன்

அரக்குமாளிகையை வீமன் கொளுத்தித் தன்தமையன், தம்பி முதலானவர்களோடு போய்விட்டது தெரியாமல் பாண்டவர்கள் இறந்துவிட்டதாக விதுரர் புலம்புகிறார்.

வெள்ளிமலை யோத்தபல மேடை என்ற மெட்டு.

1 அருமையுள்ள மைந்தர்களே மாண்டீரோ தியா
லாவியிழக்க விதி பூண்டீரோ ஆகா

இப்பெருங்கவலை போகாது எந்த நாளுமே
ஆரேன் துயர் தீரேன்

2 பெருமையோ டஸ்தினபுரி யாண்டீர் தந்தை
பேச்சைக்கேட்டு இங்குவந்து மாண்டீர் இந்தப்
பேருலகி லுங்களைப்போ லாரை யினிப் பார்த்திடப்
போரேன் மன தாரேன்

3 விலைமதிக்கா மாணிக்கமே மக்களா நீங்கள்
வெளிவராமாட்டாமல் மாண்டீர்களா இந்த
வீணனமானிட ஜென்மம் போனல் போகுதென்று
இருந்தீரோ மடிந்தீரோ

4 தலைவிதி யிந்தப்படி யானதோ நீங்கள்
தப்பியோட முடியாமற் போனதோ அயன்
தலையிலெழுதிய விதியின்படிக்கு இன்று
ஆச்சோ உயிர் போச்சோ

இடும்பி வீமனைக்கண்டு மோகிக்கின்றாள்.

பூமிமெச்சிடும் என்ற மெட்டு.

1 அந்தமுள்ள இந்த மன்னன் தேககாந்தி அழகையும்
கண்கள் ஒளியையும் புஜ வலியையும் அந்த
ஆதி சேஷனும் சொல்ல
வேணகாலமாகுமே

2 சுந்தர வடிவைக் கண்டஎந்தன் கண்கள் சொக்குதே
பாணம் தைக்குதே உள்ள மொய்க்குதே படும்
துன்பமெல்லாம் இன்று
அற்றுப் போகும் கால மாச்சுதே

3 மாரன் நரஜென்ம மாயுருவெடுத்து வந்தானே
ஜெக பூமானே எந்த ஊர் தானே எந்
மனத்திலே இவனை
வனத்திலேசேர வந்தேனே

4 தேவதேவருக்கு மேதுஇந்தநல்ல திரேகமே
இதனல் சோகமே தணிய லாகுமே இவ
திரேகஞ்செய்த பிர்ம
தேவனுக்கு நமஸ்காரமே

இடும்பனுக்கும் வீமனுக்கும் யுத்தம்.

வண்ணத்தினைமாவைத்தெள்ளியே என்ற மெட்டு.

1 ஆரடா என்வனம் வந்துமே ஆவல்
அன்பான தங்கைக்குத் தந்துமே நிற்கும்

அதிதீரா உன்னை சிந்துமே இதை
அறியாமலே எதிராகவே
இறுமாப்புடன் இருக்கின்றனை
அடித்து உன்னுயிரைப் போக்குவேன் அப்பால்
கடித்துத் தின்றுபசி நீக்குவேன்

2 வீம:- பாரடா என்பலம் காட்டுவேன் உந்தன்
பற்கள் சிதறவே வாட்டுவேன் அரக்கப்
பாவி யெமலோகம் ஓட்டுவேன் உன்னைப்
பந்தாடவே வந்தேனடா
உந்தனுயுள் குறையுற்றதால்
பதைத்திட இப்போ துதைப்பேனே எம
பட்டணம்சேர வதைப்பேனே

3 இடு:- குத்துவே விவனைத் தள்ளியே இப்போக்
கோபத்துடன் மனந் தெள்ளியே இதோ
கொல்லுவேன் பாரென்று துள்ளியே இடும்பன்
கோபங்கொண்டு வீரத்துடன்
நேரில்நின்று வாதாடியே
கொடுத்திட்டான் வீமனைக் குத்துமே அதைத்
தடுத்திட்டானப்போ எதிர்த்துமே

4 வீம:- எத்துவே னென்காலால் பாரடா இனி
எமலோக முனக்கு ஊரடா அரக்கா
என்பேர் வீமனென்று தேரடா என்று
எதிராகவே அதிதீரமாய்ச்
சதிபேசியே இடும்பன் தனை
எடுத்து ஆகாயத்தில் விடுத்தான் அவனைப்
பிடித் திரண்டாகவே கிழித்தான்

கவி.

கடுமைசெய் அரக்கன்தன்னைக் காலனூ ரனுப்பிவிட்டு
இடும்பியைக் கூட்டியங்கு இணையிலாக் குமரன்பெற்றுக்
கொடுமையை யொழித்தவியாச குருகுல முனிவர்தன்னால்
அடுமிகும் வேத்ரகிய மந்தணரர்கிச் சென்றூர்

வேத்திர கீயத்திலிருந்து வீமன் பகாசூரனுக்கு ஆகாரங்கொண்டுபோய்க் கொடாமல் தான் புசித்துவிட்டதால் இருவருக்கும் யுத்தம்.

பொன்னுலவு சென்னிகுள என்ற மெட்டு.

பகாசூரன்.

1 நேத்திரத்தால் பார்த்துமுன்னை தீர்த்திடாமல் விடுவேனோ
நில்லடா நில்லடா நீயும் ஆரடா பேரைச்
சொல்லடா சொல்லடா என்னைப் பாரடா வெகு
நேரமாயென்னைச் சோரவேசெய்து நீரமாநீயுஞ்சோறுமுண்டது
நேர்த்தி நேர்த்தி இதுவெகு லக்ஷணம் பசி
தீர்த்திடுவேன் உன்னைக்கொன்று இக்ஷணம்

வீமன்.

2 ஆத்திரம் பொறுக்க முடியாமலார்ப்பாடஞ் செய்தாலும்
ஆகாது ஆகாது எனைக் கொல்லவே நின்
ஆவியோர் கணத்தில் வானஞ் செல்லவே
ஆகவே நீயுமேகிடாவிடில் சாகுங்காலமும் உந்தனுக்கு
ஆனது ஆனது நன்றாய்த் தேரடா உயிர்
வேணதானால் தப்பியோடப் பாரடா

பகாசூரன்.

3 கருத்த பாப்பானே உன்னைக் கண்டதுண்டஞ் செய்துபசி
களையை நீக்கிக் கொள்ளுவேன் பாரடா இனிக்
காலனுலகமுனக்கு ஊரடா கண்ணால்
கண்டுயானினிதுண்டுபோட்டுன்னை உண்டியாகவேசெய்திடாமலே
காலத்தை இனிக் கழிக்கேனடா பசிக்
கோலத்தால் வீணாய் விழிக்கேனடா

வீமன்.

4 பெருத்த சத்தம்போட்டு உருத்துப் பார்த்தாலுமே
பேயனே உன்னாலென்ன ஆகுமோ உந்தன்
காயமுயிரோடு தப்பிப் போகுமோ அடா
பித்தனே இங்கு கத்தினாலுன்னை இத்தருணமே எத்துவேன்காலாற்
பேசியெந்தன் முன்னேநீ நில்லாதடா உந்தன்
ரோசவார்த்தை டம்பமே செல்லாதடா

பகாசூரன்.

5 பார்த்துமே பகாசூரன் நேத்திரமே பொரி பறக்கப்
பல்லை நெறநெறவென்று கடித்தான் நரனை
மெல்லுவேன் மெல்லுவே னெனத்துடித்தான் அடே
பாப்பானே எந்தன்சாப்பாடுதின்று ஏப்பம்போட்டு வுட்கார்ந்தாய்
பாரடா பாரடா என்று கத்தினன் உயிர்
ஏதடா ஏதடா வெனக் குத்தினன்

வீமன்.

6 வேர்த்துமே இலனுத்திரமாய்த் தீர்த்திடுவ தாய்க்குத்தவே
வீமனும் பகாசூரனைத் தூக்கினன் இனி
எமனுலகம் சேரெனத் தாக்கினன் அடே
வீணனே புத்தி வேணதசொன்னேன் அனுவங்கொண்டுவந்தாய்
விட்டிடேன் விட்டிடேன் பாரா இப்போதே என்று
எட்டியே உதையுமிட்டா னப்போதே

பகாசூரன்.

வாதனை பொறுக்க முடியாமலே பகாசூரன்
வாரிவாரி மலைகளைப் போடவே அங்கு
வேறுவேறு கிரிவிட்டுச் சாடவே செய்து
வாதுகொண்டுநீ வந்தசூரனே போதுமென்றுநீ ஓடிப்போகவும்
வாய்க்காது வாய்க்காது தப்பிப்போகவே என்று
தாக்கினனரக்கன் மனம் நோகவே

வீமன்.

வேதனையோடு அரக்கன் ஓடியே மரங்களைத் தான்
வேரோடு பிடிங்கியே அடித்தான் வீமன்
தீரமாய் எதிர்நின்று தடுத்தான் இவர்கள்
வேகமாய் மலையேகமாய்ப்போட லோகந்தாங்கிய ஆதிசேஷனும்
விந்தையென்ன விந்தையென்று நினைத்தான் அரக்கனை
அந்தகனுலகஞ் சேர வதைத்தான்

வில் வளைத்தல்.

ஸ்ரீராமச்சந்திரனே என்ற மெட்டு.

1 இந்தப் பெண்ணையுந்தேடிச் சிந்தைமகிழ்வாயோடி
ஏனோஇங்கு வந்தேனோ நான் நான் நான்

எடுத்திட வில்லை வளைத்திட
எந்தனிறலே ஆகாதென்று நின்று நின்று புலம்பியே
ஏங்கியிருந்தார் வெகு பேர் பேர் பேர்

2 அந்தமுள்ள பெண்ணென்று சிந்தைமகிழ்வாயின்று
ஆவலாக ஓடிவந்தேன் நான் நான் நான்
ஆகாது நம்மா லாகாது என்று
ஆசையெல்லாம் போக்கிமிக ரோஷமாகப் பேசியே
அப்பால் சென்றார் வெகு பேர் பேர் பேர்

3 சிலைக்கொரு கும்பிடு திரௌபதிக்கொரு கும்பிடென்று
செப்பிய மன்னர் சிலர் பேர் பேர் பேர்
தெரியாம லிதை யறியாமல் எங்கள்
தேசங்களை விட்டுஇங்கு ஆசைப்பட்டு வந்தது
செல்லாதென்றார் வெகு பேர் பேர் பேர்

4 மலையொத்த வில்லிதென்று நிலைதெரியாமலின்று
வந்தோமென்றார் வெகு பேர் பேர் பேர்
வாடினார் துய ராடினார் இதோ
வந்தனங்கள் தந்து எங்கள் சொந்தவூரு போரோமென்று
வருத்தங்கொண்டார் வெகு பேர் பேர் பேர்

5 துரியோதனனெழுந்து மனமுமிக மகிழ்ந்து
துரிதமாயோடிச் சபை நேர் நேர் நேர்
ஜோராக அவை நேராக நின்று
சொல்லற் கரியவில்லை மெல்ல வளைத்தபோது
தூக்கிவிட்டதாகாயம் பார் பார் பார்

6 பிரியமுடன் கர்ணன் துரிதமாய்வந்துமுன்னம்
பெரும்வில்லை தூக்கிச்சபை நேர் நேர் நேர்
பிடித்திட்டானதை வளைத்திட்டான் அப்போ
பின்னுமொரு மயிர்க்காலின் கண்ணலே நின்றதனு
பிகுவால் விழுந்திட்டானே பார் பார் பார்

7 அந்தணரைப் போலவந்த சுந்திர விஜயனந்த
அற்புத வில்லையெடுத்த ஜோர் ஜோர் ஜோர்
அறியவே சபையோர் தெரியவே
அந்தக்ஷணம் வில்வளைத்துப் பந்தயக்குறி லக்ஷியம்
அற்றுவிழ அம்புவிட்டான் சீர் சீர் சீர்

8 சுந்திர விஜபனந்தப் பந்தயக்குறி லக்ஷியம்
சொன்னபடி செய்துசபை நேர் நேர் நேர்
சொந்தமாய் மிக அந்தமாய் உள்ள
தோகை பாஞ்சாலிகையை வேகமாய்த் தான்பிடித்து
ஜோராகச் சென்ருன் ஊர் ஊர் ஊர்

ர்ஜுனன் பாஞ்சாலன் சபையில் வில்வளைத்து, ·ரௌபதையை மாலையிட்டு அழைத்துப்போகத் ரியோதனன் பொருமைகொண்டு கூறுகிருன்.

கண்ணுயிரம் படைத்த என்ற மெட்டு.

பாஞ்சாலியென்று உள்ளம்பூரித்து இன்று
நா டித் திருமணஞ்சூட விரைவினில் வந்தோமே ஒரு
நா தியுமில்லாத பாதகராய் மனம் நொந்தோமே
நம்மை மோசஞ்செய்ய ராஜன் பாஞ்சாலன் பைய
நாட்டினுன் சுயவரஞ் சாட்டினுன் இப்பெரும்வில்லையேஇவன்
நடுங்கவே போர்செய்து ஒடுங்கச்செய்யாவிடில் தொல்லையே
மன்னுதி மன்னர்களே என்ன மோசங்களே
வந்தது அந்த அகமுள்ள பார்ப்பானுல் பார்த்தீரா இந்த
மாது துரௌபதை போக அவன்பின்னுல் தீர்த்தீரா
வாருங்கள் ஒருமித்துச் சேருங்கள் மனமொத்து
வாதித்து இவன்பலம் பேதித்து அற்றிடச்செய்குவோம் வந்த
மகிதல மன்னோர்கள் பலங்கள் தெரிந்திட உய்குவோம்

கவி.

வாதிப்போ மென்று சொல்லி வலுவுடன் வந்தெதிர்த்த
நீதிகளில்லா மன்னர் நீண்டதோர் துயரங்கொண்டு
போதிது மென்றுசொல்லிப் புறப்பட்டுஓடும் வண்ணம்
தீதிலாப் பாண்டுபுத்ரர் திறமுடன் யுத்தம்செய்தார்

அருச்சுனன் தாயாரிடஞ் சொல்லுகிருன்.

சோமசேகரன்ருளும் மாலா என்ற மெட்டு.

அன்னையே கனியொன்று நான் கொண்டு வந்தேன் மிக
அன்புடன் உந்தனிடஞ் சொல்லி நிற்றேன் அதை
இன்னது செய்வதென்று தோணுமல் யானே சேயன்
சென்னி வணங்கியே யுனைச் செலவுகேட்டேன்

2 என்னை அன்புடனே கேட்ட பாலா பாலா உனக்
கேற்ற வாக்குச்சொல்வேன் ஜெய சீலா சீலா சிந்தை
மகிழ்வாக ஐவரும் புசித்திடுவீரே ஜெகம்
புகழ்நல்ல பேர் பெற்று வாழ்ந்திடுவீரே

துஷ்டத்தூய்மன் பாண்டவர்களைப் பார்த்து வந்து தன் தகப்பனிடம் தெரிவித்தல்.

கண்ணிகள்.

சித்திரப் பச்சைகச்சை என்ற மெட்டு.

1 அந்தண ரென்றுநீர் சிந்தை மயங்குவதேது அஸ்தி
னாபுரிப் பாண்டவர் என்பதற்குத் தடையாது
சிந்தையில் சந்தேகம் எண்ணாதீர் எண்ணாதீர்
தெரியும்படி அடியேனும் பிரியமுடன் சொன்னேனே
2 விந்தையுடன் வில்வளைத்தவன்விஜயன்தானே பொறுமையாய்
வீற்றிருந்த வர்யுதிட்டிர ராஜா சொன்னேனே
பந்தலின்கால் கொண்டு சாடினவன் வீமன்
பக்கத்திலே நின்றவன் நகுலன் சகாதேவன் (அ)
சிந்தை மகிழ்வாய்க் குலாலன் வீட்டில் கண்டேனே அவர்
செய்கையாலே பஞ்சபாண்டவாளென் றறிந்தேனே
தந்தையே சந்தேகம் கொள்ளாதீர்
சாற்றினேன் துணிவாகப் போற்றிப் பணிந்துமே (அ)

துரௌபதாதேவி திருக்கல்யாணம்.

செந்தின் மாநகரில்வாழ் கந்தநாதனிரு என்ற மெட்டு.

1 தேவலோகம் போலே நாகரீகமாக
தேசஅலங்காரமே கண்ணுங்
கூசிடுஞ் சிங்காரமே நாகசுரஞ்
சிறந்திட்ட டங்காரமே சத்தம்
தேவதுந்துமிகள் வாத்தியம் பின்னிடச்
செய்திட்டாரந் நேரமே
2 ஆவலோடு வேதமந்திரம் பக்தியாய்
அந்தணர்வோதிடவே தருமரும்
சிந்தை மகிழ்ந்திடவே மங்கிலிய
மன்பாய்த் தரித்திடவே மங்க

ளாகிகள் சொல்லிப் பாஞ்சாலிக்கும் தர்மருக்கும்
ஆலாத்தி எந்திடவே
3 நேர்த்தியானபல வாத்தியங்களும்
பூர்த்தியாய்ச் சாடிடவே மங்கள
தோத்திரம் பாடிடவே திரௌபதி
நெஞ்சம் மகிழ்ந்திடவே மணம்
நேசமாய் வீமன் அர்ச்சுனன் நகுலன்சகா
தேனுவம் செய்திடவே
4 சாஸ்திரப்படி துரௌபதைக்குத் தாலி
தரித்திட்டா ரைவருமே புஷ்பம்
இறைத்திட்டார் யாவருமே சந்தனம்
தெளிந்திட்டார் சபையோருமே மிகச்
சந்தோஷமாகவே சந்தனம் தாம்பூலம்
தந்திட்டா ரந்நேரமே
இந்திரப் பிரஸ்தம்தன்னில் இணையிலாமண்டபம்தான்
அந்திரலோகம்போல அமைத்தந்தமயனுமப்போ
தந்திடப்பாண்டு மைந்தர் தகுராஜசூயயாகம்
சிந்தையுமகிழ்ச்சியாகச் செய்தவர் வாழ்ந்துவந்தார்

34 துரியோதிரன் பாண்டவர்கள் க்ஷேமத்தைக் கண்டு சகுனியோடு முறையிடுகிறுன்.

மஞ்சுளிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

மனதில் வருத்தங்கொண்டேனே பாண்டவர்கள்மீண்டும்நன்ருய்
வாழ்ந்திடவும் யானுங் கண்டேனே இந்த
மண்ணில் மன்னர்கள் எந்தன் முன்னுலே
கெண்ணியமாய் ஆண்டிட இம்
மன்னனும் பொறுக்கமாட்டேனே
அவர்களையும் கவஜேயுறும்
மார்க்கம் செய்ய உம்மைக் கேட்டேனே
நம்மைப்போல நாடும் ஆண்டாரேஇன்னிலத்தினில்மன்னவராகி
நற்புகழ் மிகவும் பூண்டாரே ஐயா
நல்ல தந்திர இந்திரஜால
வல்லமோசம் புரிந்திடும் மாமா

நானென்னசெய்குவேன் பார்மேலே
நேசங்கள்செய்து மோசங்க ளாலவர்
நாடுதான் பறிப்பீர் சூதாலே

3 முன்னவனென்றெண்ணாமலேயே பாண்டவர்கள் வேண்டி ...னே
மதியாததாலடைந்தேன் தொல்லையே மனம்
வாடுதே துயராடுதே படும்
பாடிதே உடல் சோருதே நல்ல நல்
வாக்கு அளித்திட்டால் யானே
இனமுமுன்னைக் கணமே செய்து
மறவாமலே துதித்திடுவேனே

...ற்சூது வித்தை பூண்டோனே சகுனிமாமா மகிதல ...ள்
உந்தனைக்கொண் டல்லோ ஆண்டேனே உனை
...த்திவந்தேனே மெத்தவும் நானே
...த்தனைப்போல் புத்திகெட்டேனே
...ான் தொழுது குல தெய்வமாய்த் தானே
உந்தனையே எந்நாளும்
நாடித்துதி செய்திடுவேனே

சகுனிசொல் கவி.

...மையென் மருகாநீயு மஞ்சிட வேண்...ா மந்தப்
...மையாய் வாழும்பாண்டு புத்திரர் மிகவுமஞ்சிச்
...மை யடையுமார்க்கம் செய்குவேன் ...டியிற் சூதால்
...யாய் அவரையிங்கு உடன்வர ...ழைப்பாய்நீயே

...ரர் துரியோதனன் துராலோ...னையை மறுத்து
நீதிமொழி சொல்லு...ார்.

மலடிவயிற்று மகன் என்ற மெட்டு.

...ஞ்சகமகனே வாதாடாதே புஞ்ச
...ாசனைபண்ண நாடாதே கொஞ்சப்
...திரீ கொண்டாலாகாதே அரசு நில்லாதே
... ...மாமன்சொல் கேளாதே கொடு
... செய்துநீ மாளாதே அவன்
...ி கேட்டதில் வீழாதே கெட் டலையாதே

...திகாடு கொடுத்தது ஞாயம் பட்டிச்
...நனி சொல்வது வீண்மாயம் ஏது
...லலவே இவன் தன் சகாயம் வருமோசம்
...நியல்லவே நீசொலும் பேச்சு மேதினி
...ர்கேட்டால் மிகவேச்சு ஆதலா
... அரசுக் கீனமாச்சு அறிவாயே

துரியோதனன் சொல் கவி.

பாச...ங்கள் கொண்டு அந்தப் பாண்டுவின் மைந்தர்...
ஆசை...யா யிருப்பதெல்லாம் அறிந்திட்டேன் இன்று தா...
மோ...சங்கள் ஒன்றுமில்லை முக்கிய திருபந்தன்...
கூ...மல் கொண்டுபோய் நீர் கொடுத்துத்தான் வருவீரை...

துரியோ...னன் கொடுத்த நிருபத்தை விதுரர்பெற்
கொண்டுபோய்ப் பாண்டவரிடம் கொடுத்து,
உண்மையை உரைக்கின்றார்.

பா... வாய்க் கழுகில் வந்தூர் என்ற மெட்டு.

மடுவில் ய...னையைக் காத்த மாயவன் கிருபையாலே
மைந்தர்க... வாழ்வீர்கள் சுகமாகவே
வந்தசேதி...சால்லுவேன் தெளிவாகவே
கெடுபுத்திச் ...நனியும் கெர்வமுள்ள துரியனும்
கெட்ட கிலீ...புகள் மிக எண்ணியே
கட்டிடம் வ...ாகவே பண்ணியே
ஆசையோடு அழ...னக்கு வாசஞ்செய்யப் போவதாக
அழைத்துவ...ிட தேசமே
இழுத்திடலா...மென்ற மோசமே
யோசனைகள் செய்துமிக நேசமாயழைத்து வர
உத்திரவு தந்தாரிதோ பாராய்
மெத்தத்துயரோடு வந்தேன் நேராய்

பாண்டவாள் சரித்திரப் பாரதத் திருப்புக...
காவடிச்சிந்து முதற்பாகம் முற்றிற்று